ஏழுமலையான் தரிசனம்: 12 மணி நேரம் காத்திருப்பு

திருப்பதி, ஏப். 11: திருமலை ஏழுமலையானை தரிசிக்க பக்தர்கள் தர்ம தரிசனத்தில் 12 மணி நேரம் காத்திருந்தனர்.

ஏழுமலையானை வியாழக்கிழமை காலை நிலவரப்படி, வைகுண்டம் காத்திருப்பு அறைகளில் உள்ள 18 அறைகளில் தரிசனத்துக்காக காத்திருந்தனர்.

தர்ம தரிசனத்துக்கு (தரிசன டோக்கன்கள் இல்லாதவர்கள்)12 மணி நேரமும், ரூ. 300 விரைவு தரிசனத்துக்கு 3 முதல் 4 மணி நேரமும், நேரடி இலவச தரிசன டோக்கன்கள் பெற்ற பக்தர்களுக்கு 3 முதல் 4 மணி நேரமும் ஆனது.

ஏழுமலையானை புதன்கிழமை முழுவதும் 65,570 பக்தர்கள் தரிசனம் செய்தனர்; இவர்களில் 24,446 பேர் முடி காணிக்கை செலுத்தினர். உண்டியல் மூலம் பக்தர்கள் சமர்ப்பித்த காணிக்கைகளைக் கணக்கிட்டதில் ரூ. 3.53 கோடி வசூலானதாக தேவஸ்தானம் தெரிவித்துள்ளது.

பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிட்டெட்

பெருநிறுவன அலுவலகம்: செரிப்ரம் IT பார்க் B2 கட்டடம், 5ஆவது தளம், கல்யாணி நகர், புனே, மகாராஷ்டிரா - 411014. கிளை அலுவலகம்: 1ஆவது தளம், ஸ்ரீ சாரா டவர்ஸ், 6 – 10, டாக்டர். பாலசுந்தரம் சாலை, நகராட்சி கட்டடம் அருகில், கோயம்புத்தூர் - 641018.

அதிகாரப்பூர்வ அலுவலரின் விவரங்கள்: பெயர்: ரதீஷ் ராமச்சந்திரன், மின்னஞ்சல் முகவரி: Rathish.ramachandran@bajajfinserv.in, கைப்பேசி எண்: 7094449912/9884695545/8669189048.

அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான E-ஏலப் பொது அறிவிப்பு
கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 ('சட்டம்') கீழ்

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாக அறிவிப்பது யாதெனில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர் / கூட்டுக் கடன்தாரர் ஆகியோர் கீழ்க்காணும் அசையாச் சொத்தை **பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் ('BHFL')** நிறுவனத்திடம் அடமானம் வைத்துள்ளனர். இந்த அசையாச் சொத்து ('கடனீட்டுச் சொத்து / சொத்து') **SARFAESI சட்டம்** 2002 மற்றும் அதன் விதிகளுக்கு ஏற்ப அதிகாரப்பூர்வ அலுவலரால் சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் கீழே குறிப்பிட்டுள்ளபடி BHFL-க்கு வர வேண்டியுள்ள கடன் நிலுவைகள், உரிய வட்டி, கட்டணங்கள், செலவினங்கள் முதலானவற்றைத் திரும்பப் பெறும் பொருட்டு இந்தக் கடனீட்டுச் சொத்தானது ஏலக்கோரல் முறையில் பொது ஏலத்தின் மூலம் 14.05.2024 அன்று விற்பனை செய்யப்பட உள்ளது. கடனீட்டுச் சொத்தின் விற்பனையும் ஏலமும் **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்", "மாற்று வழங்கப்பட மாட்டாது"** எனும் முறைகளில் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள், விதி எண்கள் 8 & 9 ஆகியவற்றின் கீழ் (இனி 'விதிகள்' எனக் குறிப்பிடப்படும்). இது பின்வரும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க நடத்தப்படும்.

கடன் கணக்கு விவரங்கள் / கடன்தாரர்/கள் மற்றும் ஜாமீன்தாரர்/கள் பெயருடன் முகவரியும்		
LANs: 459TSHEH238295 & 459HSLEH133467 **1. நந்தகுமார் G (காலஞ்சென்றதால் சட்டப்பூர்வ வாரிகள் மூலம் மற்றும் கடன்தாரர்), 2. லதாபாரதி N (கூட்டுக் கடன்தாரர் மற்றும் கடன்தாரரின் சட்டப்பூர்வ வாரிசு),** கதவு எண்: 124-3, 4, 5, 6, புதுங்குடு, அயோத்தியாபட்டிணம், சேலம், தமிழ்நாடு - 636103. **மொத்த நிலுவைத்தொகை: ரூ.66,67,149/-(ரூபாய் அறுபத்தாறு இலட்சத்து அறுபத்தேழாயிரத்து நூற்று நாற்பத்தொன்பது மட்டும்)** மற்றும் 30.03.2024 வரையான மேல்வட்டி மற்றும் கட்டணங்கள் உட்பட.	**1. E-ஏல நாளும் நேரமும்** **2. டேவணித் தொகை [EMD] செலுத்தக் கடைசி நாள்** **3. சொத்து ஆய்வுக்கான நாளும் நேரமும்** **4. சொத்து விவரம்** **1) E-ஏல நாளும் நேரமும்:-** 14.05.2024 அன்று முற்பகல் 11:00 மணிக்கும் நண்பகல் 12:00 மணிக்கும் இடையில் எண்ணிக்கை வரம்பின்றி 5 நிமிடக் காலநீட்டிப்புடன். **2) வாடிக்கையாளர் விவர [KYC] ஆவணங்களுடன் டேவணித் தொகை [EMD] செலுத்தக் கடைசி நாள்:-** 13.05.2024 அன்று மாலை 5:00 மணிக்குள் (இந்திய நேரப்படி). **3) சொத்து ஆய்வுக்கான நாள்:-** 15.04.2024 முதல் 10.05.2024 முடிய முற்பகல் 11:00 மணிக்கும் மாலை 4:00 மணிக்கும் இடையில் (இந்திய நேரப்படி)	• **குறைந்தபட்ச விலை** • **சொத்துக்கான டேவணித்தொகை** • **ஏல உயர்வுத்தொகை** **குறைந்தபட்ச விலை:-** ரூ.63,00,000/- (ரூபாய் அறுபத்து மூன்று இலட்சம் மட்டும்), **டேவணித்தொகை :-** .6,30,000/- (ரூபாய் ஆறு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்), குறைந்தபட்ச விலையில் 10% **ஏல உயர்வுத்தொகை:-** ரூ.50,000/- (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மற்றும் அதன் மடங்குகளில்.

அசையாச் சொத்து விவரம்: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய விவசாயம் அல்லாத சொத்து. RS எண் 69/4, உட்பிரிவுப்படி சர்வே எண் 69/4A1, புதி உட்பிரிவுப்படி 69/4A1A. அளவு: கிழக்கு மேற்காக இரண்டு பக்கமும் - 30 அடி, வடக்குத் தெற்காக இரண்டு பக்கமும் - 50-1/2 அடி, மொத்தப் பரப்பளவு 1507 சதுர அடிக் கொண்ட நிலம், RCC கட்டடம் மற்றும் இதர பழுக்க உரிமைகள் உட்பட. அமைவிடம் - மனை எண்-1, Nds நகர், அயோத்தியாபட்டிணம் ஒன்றியம், அயோத்தியாபட்டிணம் நகரம், அயோத்தியாபட்டிணம் ஊராட்சி, வாழப்பாடி வட்டம், சேலம் மாவட்டம். எல்லைகள் பின்வருமாறு: **கிழக்கு:** மனை எண் 2, **மேற்கு:** 23 அடிச் சாலை, **வடக்கு:** மனை எண் 50, **தெற்கு:** 23 அடிச் சாலை.

பொது ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு:

• பொது ஏலமானது **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "மாற்று வழங்கப்பட மாட்டாது"** எனும் முறைகளில் நடைபெறும். • மேலும் இது பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெடுக்குத் தெரிந்த அல்லது தெரியாத தற்பொழுதுள்ள மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய வில்லங்கங்களுடனே விற்பனை செய்யப்படுகிறது. • கடனீட்டுச் சொத்து குறைந்தபட்ச விலைக்குக் குறைவாக விற்பனை செய்யப்பட மாட்டாது. • இந்த ஏல விற்பனை இணைய வழியில் e-ஏலத் தளத்தில் நடைபெறும். • இந்த e-ஏலம் https://bankauctions.in எனும் இணைய முகப்பில் **14.05.2024 அன்று முற்பகல் 11:00 மணியிலிருந்து நண்பகல் 12:00 மணிக்குள்** எண்ணிக்கை வரம்பின்றித் தலா 5 நிமிடக் காலநீட்டிப்புடன் நடத்தப்படும். • நிறுவனத்தின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், அறிய பார்க்க வேண்டிய இணையத்தளம்: **https://www.bajajhousingfinance.in/auction-notices அல்லது https://bankauctions.in** மற்றும் மேலும் விவரங்கள் பெற அதிகாரப்பூர்வ அலுவலரைத் தொடர்பு கொள்ளலாம்.

நாள்: 12.04.2024, இடம்: சென்னை — **அதிகாரப்பூர்வ அலுவலர் (ரதீஷ் ராமச்சந்திரன்), பஜாஜ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்**

காமராஜரை மறந்த காங்கிரஸ் தலைவர்கள்

தமிழிசை குற்றச்சாட்டு

சென்னை, ஏப்.11: சென்னையில் உள்ள பெருந்தலைவர் காமராஜரின் நினைவகத்தை காங்கிரஸ் தலைவர்கள் மறந்துவிட்டனர் என்று தென்சென்னை தொகுதி பாஜக வேட்பாளர் தமிழிசை சௌந்தரராஜன் குற்றஞ்சாட்டினார்.

கிண்டியில் வியாழக்கிழமை பிரசாரத்தில் ஈடுபட்ட தமிழிசை சௌந்தரராஜன், அங்குள்ள காமராஜர் நினைவகத்தில் மரியாதை செலுத்தினார். அந்த வளாகத்தில் உள்ள காமராஜர் சிலைக்கும் தமிழிசை சௌந்தரராஜன், பாஜக மாநிலச் செயலர் கராத்தே தியாகராஜன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இதைத் தொடர்ந்து, தமிழிசை செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகம் பல்வேறு துறையில் வளர்ச்சியடைந்துள்ளது என்றால் அதற்கு பெருந்தலைவர் காமராஜர் ஆட்சிதான் காரணம். குறிப்பாக, மதிய உணவுத் திட்டம் உள்பட கல்வி நலன் காக்க பல்வேறு திட்டங்களை காமராஜர் கொண்டுவந்தார். காங்கிரஸில் தவிர்க்க இயலாத பெருந்தலைவராக விளங்கிய காமராஜருக்காக கிண்டியில் அமைக்கப்பட்டுள்ள நினைவகத்தில், காங்கிரஸ் மூத்த தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல் காந்தி, மல்லிகார்ஜுன கார்கே என யாரேனும் ஒருவராவது வந்து இதுவரை மரியாதை செலுத்தியுள்ளார்களா?

பராமரிக்கப்படவில்லைஃ காமராஜர் போன்ற ஒரு தலைவரின் சரித்திரத்தை யார் நினைத்தாலும் மாற்ற முடியாது. அப்படியான பெருந்தலைவரின் மணிமண்டபத்தைகூட திமுக அரசு முறையாகப் பராமரிக்கவில்லை.

சென்னை காமராஜர் நினைவிடத்தில் வியாழக்கிழமை மரியாதை செலுத்திய தென் சென்னை தொகுதி பாஜக வேட்பாளர் தமிழிசை சௌந்தரராஜன். உடன் பாஜக மாநிலச் செயலர் கராத்தே தியாகராஜன் உள்ளிட்டோர்.

காமராஜர் நினைவகம் அமைந்துள்ள இடம் முழுவதும் முறையாக தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்படாத நிலையில் உள்ளன. முன்னாள் முதல்வர் கருணாநிதியின் நினைவிடத்தை சிறந்த முறையில் பராமரிக்கும் திமுக அரசு, காமராஜர் நினைவிடத்தைப் பராமரிப்பதில் பாரபட்சம் காட்டுகிறது.

அவசரநிலையைப் பிரகடனப்படுத்தி, கருணாநிதியையும், மு.க.ஸ்டாலினையும் சிறைக்குத் தள்ளிய காங்கிரஸ் கட்சியுடன் திமுக கூட்டணி வைத்துள்ளது. கச்சத்தீவை திமுக தாரைவார்த்துவிட்டு தற்போது பிரதமர் மோடியைப் பார்த்து கேள்வி கேட்க முதல்வர் ஸ்டாலினுக்கு தகுதி இல்லை.

வி.பி.சிங் முதல் மன்மோகன் சிங் வரை மத்தியில் ஆட்சி செய்தபோது, அவர்களுடன் பல்வேறு காலகட்டத்தில் கூட்டணியில் இருந்த திமுகவால் தமிழகத்துக்கு என்ன முன்னேற்றத்தைக் கொண்டு வர முடிந்தது?

பிரதமருக்கு மக்கள் ஆதரவுஃ வாக்கு சேகரிப்பதற்காக மட்டுமே பிரதமர் மோடி தமிழகம் வருவதாக பொய்யான விமர்சனத்தை எதிர்க்கட்சிகள் முன் வைக்கின்றன. தமிழக மக்கள் மீதுள்ள அன்பின் காரணமாக மட்டுமே பிரதமர் அடிக்கடி தமிழகத்துக்கு வருகை தருகிறார். ஒவ்வொரு முறை அவர் வரும் போதும், மக்களிடையே பிரதமருக்கான ஆதரவு அதிகரித்து வருகிறது என்றார் அவர்.

பாஜக மாநிலச் செயலர் கராத்தே தியாகராஜன் கூறியதாவது: நான் காங்கிரஸ் மாவட்டத் தலைவராக இருந்தபோது, சென்னைக்கு வருகை தந்த சோனியா காந்தி, ராகுல் காந்தியிடம் காமராஜர் நினைவிடத்துக்கு வந்து மரியாதை செலுத்தும்படி கோரிக்கை வைத்தேன். ஆனால், அவர்கள் வர மறுப்பு தெரிவித்துவிட்டனர் என்றார்.

திருப்பத்தூரில் 106.8 டிகிரி வெயில்

சென்னை, ஏப். 11: தமிழகத்தில் வியாழக்கிழமை அதிகபட்சமாக திருப்பத்தூரில் 106.88 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பம் பதிவானது. மேலும், 11 இடங்களில் 100 டிகிரிக்கு மேல் பதிவானது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் சார்பில் வியாழக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

தமிழக உள் மாவட்டங்கள், தென் மாவட்டங்களில் அதிக பட்ச வெப்பநிலை வியாழக்கிழமை இயல்பைவிட 4 டிகிரி அதிகமாக இருந்தது. இதனால், மாநிலத்தில் 11 இடங்களில் வெப்ப அளவு 100 டிகிரி ஃபாரன்ஹீட்டுக்கும் அதிகமாக பதிவானது.

அதன்படி, திருப்பத்தூர் – 106.88, ஈரோடு– 104, சேலம் – 103.28, பரமத்தி வேலூர் – 102.56, தருமபுரி, நாமக்கல் (தலா) – 102.2, மதுரை விமான நிலையம் – 101.12, திருத்தணி – 100.94, வேலூர் – 100.79, திருச்சி – 100.58, மதுரை நகரம் –100.4.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் ஏப்.11 முதல் ஏப்.15 – ஆம் தேதி வரை வெப்பநிலையில் எவ்வித மாற்றமும் இருக்காது. அதேநேரத்தில், தென் தமிழகம் மற்றும் வட தமிழகத்தில் வெள்ளிக்கிழமை (ஏப்.12) முதல் ஏப்.16 தேதி வரை ஒரு சில பகுதிகளிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் கடும் வெயிலுக்கு பிறகு இடி மின்னலுடன் லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது.

தாய்லாந்தில் தமிழர்கள் நினைவாக நடுகல்

திறப்பு விழாவில் பங்கேற்க முதல்வருக்கு அழைப்பு

சென்னை, ஏப். 11: தாய்லாந்தில் உயிரிழந்த தமிழர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நடுகல்லை திறந்து வைக்கும் விழாவில் பங்கேற்க முதல்வரும் திமுக தலைவருமான மு.க.ஸ்டாலினுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

தாய்லாந்தில் இருந்து வந்துள்ள அந்த நாட்டின் தமிழ்ச் சங்கத் தலைவர் ரமேஷ் தர்மராஜன், துணைத் தலைவர் ரமணன், ஒருங்கிணைப்பாளர் சுந்தரகுமார் ஆகியோர் முதல்வரை அவரது முகாம் அலுவலகத்தில் வியாழக்கிழமை சந்தித்தனர்.

அப்போது, தாய்லாந்து நாட்டின் காஞ்சனபுரியில் அமைக்கப்பட்டுள்ள நடுகல் திறப்பு விழாவில் பங்கேற்க முதல்வருக்கு அவர்கள் அழைப்பு விடுத்தனர்.

நடுகல் எதற்கு? கடந்த 1939 முதல் 1945 வரை 2–ஆம் உலகப் போர் நடைபெற்றது. அப்போது, ஜப்பானிய ராணுவத்திடம் போர்க் கைதிகளாக இருந்தவர்கள், மலேசியா, இந்தோனேசியா, பர்மா ஆகிய நாடுகளில் இருந்து கட்டாயப்படுத்தி ஆங்கிலேயர்களால் அழைத்துச் செல்லப்பட்டனர். அவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டவர்களில் 1.50 லட்சம் பேர் தமிழர்கள், தாய்லாந்து நாட்டினைப் பர்மாவுடன் இணைக்கும் ரயில் பாதையின் கட்டுமானப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். இந்தப் பணியின்போது வேலைச்சுமை, போதிய உணவு கிடைக்காமை, நோய் முதலிய காரணங்களால் சுமார் 70,000 தமிழர்கள் இறந்தனர். தாய்லாந்து நாட்டின் காஞ்சனாபுரியில் உள்ள தவாவோர்ன் என்ற புத்தர் கோயில் வளாகத்தில் மட்டும் 10,000–க்கும் மேற்பட்ட தமிழர்களின் உடல்கள் அடையாளம் காணப்பட்டன. எந்தவிதமான அங்கீகாரமும் இல்லாமல் அங்கு புதைக்கப்பட்ட தமிழர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், தமிழ்ச் சமுதாய மரபுப்படி நடுகல் அமைக்க தாய்லாந்து நாட்டு தமிழ்ச் சங்கம் முடிவு செய்தது.

இதுதொடர்பாக, முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் கடந்த ஜனவரியில் முறைப்படி தெரிவிக்கப்பட்டது. இதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்ட அவர், நடுகல் அமைக்க ரூ. 10 லட்சம் நிதியையும் அளித்தார். 3 மாதங்கள் கடந்துள்ள நிலையில், தாய்லாந்தில் இப்போது நடுகல் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நடுகல்லை திறந்து வைக்க வேண்டுமென முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தாய்லாந்து தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

வடமாநிலங்களுக்கு சிறப்பு ரயில்கள்

சென்னை, ஏப். 11: கோடை விடுமுறையை முன்னிட்டு தில்லி, ஷாலிமருக்கு சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

சென்னை சென்ட்ரலில் இருந்து ராஜஸ்தான் மாநிலம் பார்மெர் பகுதிக்கு ஏப்.14, 21 ஆகிய தேதிகளில் சிறப்பு ரயில் (எண்: 06097) இயக்கப்படும். சென்ட்ரலில் இருந்து ஞாயிற்றுக்கிழமை பகல் 1.30 மணிக்கு புறப்படும் ரயில் செவ்வாய்க்கிழமை பகல் 1.40 மணிக்கு பார்மெர் சென்றடையும். மறுமார்க்கமாக பார்மரில் இருந்து சென்ட்ரலுக்கு ஏப்.17, 26 ஆகிய தேதிகளில் இரவு 9 மணிக்கு சிறப்பு ரயில் (எண்: 06098) இயக்கப்படும்.

கேரள ரயில்கள்ஃ கேரள மாநிலம் கொச்சுவேலியில் இருந்து கொல்கத்தாவின் ஷாலிமருக்கு ஏப்.12 முதல் மே 31–ஆம் தேதி வரை வெள்ளிக்கிழமை தோறும் சிறப்பு ரயில் (எண்: 06081) இயக்கப்படும்.

மறுமார்க்கமாக ஷாலிமரில் இருந்து கொச்சுவேலிக்கு ஏப்.15 முதல் ஜூன் 3–ஆம் தேதி வரை திங்கள்கிழமைதோறும் சிறப்பு ரயில் (எண்: 06082) இயக்கப்படும்.

இதுபோல், கேரள மாநிலம் எர்ணாகுளத்தில் இருந்து தில்லிக்கு ஏப்.19 முதல் மே 31–ஆம் தேதி வரை வெள்ளிக்கிழமை தோறும் சிறப்பு ரயில் (எண்: 06071) இயக்கப்படும்.

மறுமார்க்கமாக தில்லியில் இருந்து எர்ணாகுளத்துக்கு ஏப்.22 முதல் ஜூன் 3–ஆம் தேதி வரை திங்கள்கிழமைதோறும் சிறப்பு ரயில் இயக்கப்படும்.

தமிழகத்தில் இதுவரை ரூ.305 கோடி பணம், நகை, பொருள்கள் பறிமுதல்

சென்னை, ஏப். 11: தமிழகத்தில் இதுவரை உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட ரூ.305 கோடி மதிப்புள்ள பணம், நகைகள், மது, பரிசுப்பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தெரிவித்துள்ளார்.

தேர்தல் நடத்தை விதி அமலாக்கப்பட்டதில் இருந்து வியாழக்கிழமை காலை 9 மணி வரையிலான காலத்தில் உரிய ஆவணங்கள் இல்லாமல் எடுத்துச் செல்லப்பட்ட ரூ.144.44 கோடி ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

ரூ.5.13 கோடி மதிப்புடைய மதுபானங்களும், ரூ.94 லட்சம் மதிப்பிலான போதைப் பொருள்களும், ரூ.121.76 கோடி மதிப்புடைய ஆபரணங்களும், ரூ.33.08 கோடி மதிப்பிலான பரிசுப் பொருள்களும் பறிமுதல் ஆகியுள்ளன. ரொக்கத் தொகையுடன் சேர்த்து அவற்றின் மொத்த மதிப்பு ரூ.305.36 கோடி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.